**குவைற்றால் நிதியளிக்கப்பட்ட பாலங்களின் புனர்நிர்மாண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டம் - 2013**

குவைற்றால் நிதியளிக்கப்பட்ட பாலங்களின் புனர்நிர்மாண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது அரபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைற் நிதியத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 1995 மார்ச் 27 ஆந்திகதிய 466 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2001 செப்டெம்பர் 03 ஆந் திகதிய 627 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

பாலங்களின் புனர்நிர்மாண மற்றும் நிருமாணச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் முன்னாள் நெடுஞ்சாலைகள், கப்பற்துறை மற்றும் துறைமுக அமைச்சு தற்போது நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்று முகவராகவும் உள்ளது. விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகளின் பிரயாணக் கிரயத்தை குறைத்தல் மற்றும் நாட்டின் பிராந்தியங்களிற்கும் தலைநகரங்களிற்கும் இடையில் பிரயாண தூரத்தைக் குறைத்தல் என்பவற்றின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டமானது நெருக்கமான மற்றும் நலிவான 32 பாலங்களின் புனரமைப்பு, புனர்நிர்மாணம் அல்லது மீளமைப்பு மற்றும் கெத்தம்பே – கன்னோருவ வீதியின் அகலமாக்கல் என்பவற்றின் ஊடாக வீதிப் பாதுகாப்பை முன்னேற்றுவதையும் இலக்காக கொண்டுள்ளது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,432 மில்லியனிற்கு சமமான குவைற் டினர் 10.12 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 1,728.2 மில்லியனிற்கு சமமான குவைற் டினர் 5.10 மில்லியன் அரபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைற் நிதியம் (கேஎவ்ஏஈடி) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 1995 மார்ச் 27 இல் தொடங்கியிருந்ததுடன் 1997 திசெம்பர் 31 அளவில் 33 மாதங்களிற்குள் பூர்தியாக்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதி 2014 திசெம்பர் 31 வரை 7 சந்தர்பங்களில் இன்னொரு 13 வருடங்களால் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்தநிதிக்கூற்றுக்கள் பொதுவாகக் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும்

வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாகக் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

## 3. அபிப்பிராயம்

---------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 29.22 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா. 3,247.84 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| செலவின வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| நடைபெறும் வேலை | 29.22 | 102.30 | 3,247.84 |
| | 29.22 | 102.30 | 3,247.84 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

8 ஆண்டுகளிற்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 10,000 தொகையான முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட திரண்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | குவைற் டினர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | குவைற் டினர் மில். | ரூபா. மில் | குவைற் டினர் மில். | ரூபா. மில் |
| அரபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைற் நிதியம் | 5.10 | 1,728 | 29.50 | 0.064 | 29.22 | 3.52 | 1,586.32 |
| இலங்கை அரசாங்கம் | 5.02 | 1,704 | - | - | - | - | 1,658.71 |
| | 10.12 | 3,432 | 29.50 | 0.064 | 29.22 | 3.52 | *3,245.03 |

* இந்த தெகையானது ரூபா 2.81 மில்லியன் கூட்டுமொத்த தொகையான அட்டுறு செலவினம் மற்றும் செலுத்த வேண்டியவைகள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்காமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 6.2 காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது 2002 இல் மாவனல்ல நகரத்தில் குறுக்குப்பாதை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளிற்காக இழப்பீடு செலுத்துவதற்கு மாவனல்ல பிரதேச செயலாளருக்கு ரூபா 227,576 தொகை விடுவித்திருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 ஆண்டுகள் கடந்த பின்னரும் பிரதேச செயலாளரால் காணி உரிமையாளர்களிற்கு இழப்பீடுகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலும், செயற்திட்ட நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த ஏனைய நபர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 38,500 கூட்டு மொத்த தொகையான இழப்பீடுகள் 13 ஆண்டுகள் கடந்த பின்னரும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் தாமதங்கள் மீதான வட்டி ரூபா 35,451 ஆகும்.

### 6.3 பௌதீக செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சகல 32 பாலங்களும் வீதிப்பகுதிகளின் அகலமாக்கலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காலி –தெனியாய – மாதம்பை வீதியின் முன்னேற்றங்களிற்காக ஒதுக்கப்பட்ட தொகைகளில் ரூபா 86,813,815 இற்கு சமமான குவைற் டினர் 256,224 ஆன செலவழிக்கப்படாத மிகுதி தொகை நடைபெறும் வேலையில் இருந்தது.